தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து .மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து . தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) மசோதாவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இம் மசோதாவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா சட்டப்பேரவை மசோதா எண் 24/70).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) மசோதா * சட்டப் பேரவை மசோதா எண். 24/70 ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3 அட்டவணை, குறுந்தலைப்பு முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இம்மசோதா நிறைவேற்றப்படவேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

---

* ...... தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.